உ

சிவமயம்.

583
ADRAS

தென்திருமருதூரென்னுமக்ஷேத்
திரத்தில் கலியுகவரதராயெழுந்தருளிய
ஸ்ரீ ஞானபண்டிதன்பேரில் பாடிய,

ஆனந்தக் களிப்பு

காவடிச்சிந்து.

583

இராமநாதபுரம் ஜில்லா சிவகெங்கை போஸ்டு
பெரியமருதங்குடி சரணை

E. R. S. சங்கிலிமுத்து சேர்வை குமாரன்

முத்தய்யாசேர்வை இயற்றியது.

கோவிலூர் ஆதினமடாதிபதியான ஸ்ரீமத்
அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளின் மாண
வர்களிலொருவராகிய வேதாந்த சித்தாந்த மதுரகவி
ஸ்ரீமத் அம்பல வாணசுவாமியவர்களால்
பார்வையிடப்பெற்று.

பரமக்குடி மாணிக்கம் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

1933.

ணு 2.] [காப்பி 1000.

926.47
N53
12842

உ

சிவமயம்.

சாற்றுச்செய்யுள்.

கோவிலூர் ஆதீனமடாதிபதியான ஸ்ரீமத் அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளின் மாணவர்களிலொருவராகிய வேதாந்த சித்தாந்த மதுர கவி ஸ்ரீமத் அம்பலவாண சுவாமியவர்கள் இயற்றிய

வெண்பா.

காயனூர்கோவிலுள நாகநாதன்பேரில்
மோகமாய்ச் சிந்து மொழிந்தனனால் யோகமிகும்
மாமருதனூரில் வளர் முத்தையக்கவிஞனைமன்
போல் யார் நவிலுவார்.

ஆனந்தக்களிப்பு காவடிச்சிந்து.

---

1. திருவளருமருதூரில் வாசன்—உமா
தேவிசவுந்தரவன்னை பாகம்வளரீசன்
அருள்பெருகும் நயிநாகநாதன்—மேல்
ஆனந்தக் களிப்புரைக்க வைங்கரன்றுணையே,

2. நான்முகன்னாவினில் நின்றாய்—பெரும்
நான்மறை தன்னையும் நீயே புகன்றாய்
மான்மழுவுமேந்தினோன் புகழை—சொல்ல
மாறுதென்வாக்கினில் வந்து நின்றருள்வாய்.

3. அன்னை சவுந்தரி பாகமுடையோன்—தில்லை
யம்பதிக்கரசனாந்திரு நடனவிடையோன்
பன்னகமிலங்குசெஞ்சடையோனி—சையை
பகரவுலகம்பெற்ற பாவை துணையாமே.

4. அத்தனுமையாள் வில்வவனத்தான்—அகில
மமைத்திட்ட முக்கண்ணன் அமலனின்றன்—மேல்
தத்துவருணச்சரிதைகூற—சங்கு
சக்கரமணிந்த திருமாதவன் துணையே,

5. இகபரமுனிறை பரமசீலன் — சரிதை
யியன்றவரை சாற்றினேனானுமொரு பாலன்
மகபதிதுதிக்குமலர் வாசன் — யெங்கள்
[illegible]ணிகேள்வன் அடிகள் வந்து துணையாமே.

6. மங்காதகிருத்திகை குமாரன் — வள்ளி
மனமிசயவேங்கைமரமாகிய ஒய்யாரன்
கங்காதரன் புதல்வதீரன் — மாங்
கனிக்காக மலைவலம் வந்த கெம்பீரன்.

7- சங்கரர்க்குப்பிரணவம்சொல்சீலா — சத்தி
தயவினால் திருவருள்வேல்கொண்ட பாலா
மங்கை தெய்வானை மணவாளா — யீசன்
மலரடியைப்போற்ற வரமருள் சத்திவேலா

8. நச்சிச்சாணகரில்வளர்மாரி — சென்னெல்
நலமானதமஞ்சானுக்குகந்தவொய்யாரி
வச்ரமுடிவளையலணிவீரி — யென்னை
வாழ்விக்கசெக்காங்கோபமமர்ந்த கெம்பீரி.

9. உச்சிதமாயான் சிந்துபாட — அதில்
ஒருகுறைவுமில்லாமலோங்குபுகழ்நாட
கொர்ச்சிதமாய் மூத்தயனுங்கூட — நல்ல
கிருபையோடேழைகாத்தாள் நடனமாட.

10. பாரில்வாழகத்துக்கு நேராய் — சிறுவர்
பண்பாகமணல்வீடுகட்டுவதுஞ்சரிய
பேருலகில்க் கவிவாணர் யாவும் — யிதில்
பிழைகளிருந்தாலுமே ரட்சித்துமேவும்.

11. மருதூரின் வரதனிசைபாட — பெரிய
மருதனகரய்யனார் கருவுடையர்தேட
அருள்பெருகும் குருநாதன்கூ[illegible] — அங்க
ளம்மையெனும்குலதெய்வம் நின்றுவிளையாட.

12. [illegible]பூத்த பெரியநகர்மீது — வளரும்
சொன்னலொடுபலவளமுஞ்சொல்லமுடியாது
பார்புகழுநந்தவனம் நீடும் — கந்தம்
[illegible]சிமுளசுகந்தமதை யகரமனம்நாடும்.

13. சிரந்தமலர்முல்லைகளும் அதிகம்—மிகவும்
சிறப்பானவசியர்குலச்செல்வர்களுமதிகம்
சுரந்தவெண்டாமரையுமதிகம்—பிணையிற்
சொல்லலாம்பேரளகமானகரிலதிகம்.

14. பெரியகுருநாதனுடைதேவி—யெங்கள்
பேரானஅங்காளி பிரியமுடன்மேவி
வீரியசென்னகமணிதேகி—யெங்கள்
வினையருத்தமருதூரான்மேல்ச்சிந்துதாவி

15. பாடவேயென்னாவில் துணையாய்—வாரும்
பரமகுருநாதனுடை னிருபேருமிணையாய்
கூடவேயிருபத்தோர்பந்தி—கொண்ட
குணமானயிருளாயி கிருபைதா முந்தி.

16. கிழக்குமுகம்பார்த்த சன்னிதியாம்—அதின்
கீழாகவடபுரத்தில் கருப்பணன்பதியாம்
வடக்குமுகம் பாருனைவயும் நதியாம்—யெங்கள்
வாலைமகனிருளாண்டி அருள் ஞானத்துதியாம்.

17. துடியான அக்கினிவீரன்—யென்னை
துரிதமுடன் பேர்கொண்ட முத்தயனும் சூரன்
கெடியானமா சானகெம்பீரன்—நம்மை
கிருபையுடன் றட்சிக்கும் குருநாதபாரன்

18. இன்னமு மிருக்கின்றார்கேளும்—நம்மள்
யிருபத்தோர் பந்தியில் வாழ்கிரவர் நாளும்
அன்னமெனு மங்காளிவேலும்—மிகவும்
மரிதான திருநடனமாடுமென்மேலும்

19. றாக்கிச்சியென்னும் பேருடையாள்—எங்கள்
நலமான மலையாளயிருளாயி விடையாள்
தாக்குச் சிரத்திடும் நடையாள்—நல்ல
ஸ்தலமானயிருபத்தோர் பந்தியுமுடையாள்

20. சிவன்புத்திரன் சேவகப்பெருமாள்—யின்னம்
திடமான சமையநோடயிருக்கிறார் வருமால்
புவனகுருநாதனருள் திருமால்—யாவர்
பொன்னடியை முத்தய்யா போற்றவரமருள்வாய்

Q26:417
N37

21. பொங்கரவணிந்தவனைப்பாட—ஆதி
பூபதியின் மருதநகர் கருவுடையோர்கூட
சங்[illegible] சேகண்டிமுரசாட—புவன
சக[illegible]வதிகளும் வந்துவிளையாட]

22. பார்புகளுமருதநகர்குடியேன்—அதின்
பரிவானமே பாங்கில் சரணையுடையேன்
பேர்புகள இந்ரகுலத்துதித்தோன்—நல்ல
புகழ்பெற்ற சங்கிலியின்றவத்தில் வந்துதித்தோன்

23. முத்தய்யாவென்னும்பேருடையேன்—அந்த
மூர்த்தியென்னும் பண்டிதனை மரகாத அடியேன்
சித்தனெனும் வில்வவன முடையோன்—எந்தன்
தீவினைகள கற்றுவார் மருதூரையுடையோன்

24. ஜென்மவினையகன்றுமே ஒட—ருத்ரன்
திருவடியையான் றொழுது கவிச்சிந்துபாட
அம்மாள் சவுந்தரியாள் கூட—எனக்கு
அருள்தந்து கிருபையுடன் மருதூரைநாட

25. முக்கண்ணன் வசிக்கின்ற மருதூர்—வளத்தை
முயர்ச்சியுடனியன்றமட்டும் சொல்லுகிறேன் சிறிது
திக்கெலாம் வில்வவனம் பெரிது—ஆதி
சேடனணி குருநாதன் சித்துமிகஅரிது

26. மந்தாரை முல்லையிருவாக்ஷி—ஜாதி
மலரோடுபாரி ஜாதம் மருவின்காக்ஷி
செந்தாரைவண்டினங்கள் பட்சி—நல்ல
திலதவெண்டாமரையின் குளமும்வெகு தேர்ச்சி

27. வண்டோடு தும்பிகளும்பாடும்—மிக்க
வடிவான அன்னங்கள் குளத்தருகில் கூடும்
செல்வியெனும் சவுந்தரியாள் திருவடியில் சூடும்
ஜெண்டாக ரோசுமலர்ந்தாடும்—எங்கள்

28. மடமெலாமேலவர்கள் தானம்—கலைகள்
வாசித்து மாதவம்புரிகுவார் ஞானம்
தடமெலாம் தாமரைகள்வேணம்—தேவர்
சதிர்நடனமாடியே புரிவரனுட்டானம்

29. சக்காரைக் காவடியனேகம்—கந்தம்
சார்ந்தமலர் வெற்றிவேர் காவடியனேகம்
பொர்க்கரகக் காவடியனேகம்—வேண
புள்ளிமயில் தோகைவிரித்தாடுமனேகம்

30. மேற்குமுகம் பார்த்த சன்னிதியாம்—எங்கள்
மெஞ்ஞான பண்டிதர்க்கு மூலஸ்தானத்தியாம்
பார்க்குள் விபரிசையுள்ள வளமாம்—வினைகள்
பரந்திடவே மருதூருப்பண்டிதன்குளமாம்

31. திருமதில்கள் நாலுபுரம்வீதி—ஜெக
தீசனுடமண்டபமும் பவள கிரச்சோதி
தெருவடுத்தவில்லவனம் ஆதி—அங்கு
திருவருள் கடாக்ஷித்துக்கொடுக்கிறார் விபூதி

32. தீராதவினைகள் பலகோடி—லிங்கம்
தீர்த்திடவே மருதூரில்வந்துவலமோடி
பேறான மாவிளக்கோகோடி—சுவாமி
பிரபலத்தைநாடியே வருவார்கள்பாடி

33. வாடாதவில்வவன நாதன்—பண்டு
மரகாத ஆனந்த வாஞ்சையருள் நீதன்
கூடார மருதவனத்துடையோன்—எங்கள்
குஞ்சரி சவுந்தரியை வலபாகமுடயோன்

34. மருதூரில் குடிகொண்ட மெய்யன்—யிடப
வாகனும் குருநாகலிங்க முத்தய்யன்
அருள்பெருகு மானந்தக்கையன்—எங்கள்
அள்ளல்வினை தீரவே ஆதரித்ததுய்யன்

35. ஞானபண்டிதனான மூர்த்தி—மருதூர்
நாகலிங்கக்கடவுள்தனை பெருங்கீர்த்தி
வேணவர்கள் துயர்தீர்த்த நேர்த்தி—அதை
விருப்பமுடன் சொல்லவே வெகுவானபூர்த்தி

36. வாய்பேசா ஊமைமகமதியாள்—வனம்
வந்தவுடன் பேசும்படியாய் மிகவும் துதியால்
நோயான ஜென்மவினைக் கெதியால்—உள்ளம்
நோக்கிடவே பழவினைகள் தீருமுன்னதியால்

37. மகமதியர்குலத்துதித்த முல்லா—சாய்பு
மதலையது ஊமைப்பெண்ணானதாலல்லா
ஜெகம்பரவுமல்லாகுத்தாலா—நமக்
கிப்படியும் விதித்தானோயென்றுபலநாளா

38. போகாத ஸ்தலங்களுக் குப்போயும்—ஊமை
பெண்ணுவாய் பேசாததாலலைந்தேயும்
வாகான மருதூரிலேயும்—நிதிலை
வலமாகச்சென்றபின் மவுனப்பெண்வாயும்

39. கிளிபோன்ற மொழி புகலக்கண்டு—நல்ல
கீர்த்திபுள்ள நபிறை நபிவர்தானுமென்று
வழிபாகச்சுவாமியிடம் சென்றே—லிங்கம்
வடிவத்தைத்தொட்டவுடன் மேற்குமுகமன்றே

40. திரும்பிய ஜெகவாதநீதா—என்னை
சித்தமுடன் ரக்ஷிகதிரு ஞானபோதா
விரும்பினேன் முத்தப்பா விநோதா—எங்கள்
வினையகற்றி யெனையாளும் நயினாரேநாதர்

41. தீருதவினைகளையும் தீர்ப்பாய்—என்
திரேகத்தின் வியாதிகளை சிதரடித்தோய்ப்பாய்
நேராகத்தெருசனத்தில் வருவாய்—எந்தன்
நெஞ்சகம்விட்டகலாமலிரு நாதன்குருவாய்

42. செஞ்சடையிற்கொன்றை தும்பையணிந்தோன் ஜாதி
சென்னாக வாபரணமாலையைப் புனைந்தோன்
மஞ்சுநிகர் கூந்தலுமைபாகன்—நித்யம்
மாதவம்புரிகயிலை மலையில் வளர்யோகன்

43. மருதவனவேடனுமே சென்று—வில்வ
மரத்தருகே அம்பெடுத்து பக்ஷிகளை அன்று
கருதவொரு புதரடியில் நின்று—அவர்
கணைதொடுத்து நிற்கவேகருவேங்கைகண்டு

44. விரட்டவே மூப்பனும்பயந்து—ஆதி
வில்வமரமேறியே வேடனுமயந்து
அரட்டியாய்க் கிளையைப்பிடித்து—உமை
ஆதிபரமேஸ்பரு காரெனநினைத்து

45. இருக்கபிலேபுலியது வெகிண்டு—மரத்தி
லிருபுரமும் சுற்றிவரக் கதிரவனுங்கண்டு
பரக்கவே சாரதியைக்கொண்டு—சுவாமி
பாங்கான குடதிசையில் பாலமூர்தமுண்டு

46. திருப்பத்தியாயிருக்கையிலே அருளும்—வேடன்
தெரியாமல் வில்வமதைப் பரித்துவொருபொருளும்
பூர்த்தியாய்த் தெரியாதானென்று—சுவாமி
புனிதன் காயாசமூடன் புகளருளும் பூண்டு

47. லிங்கமாய் மூனைத்துவரவேங்கை—அந்த
நிமிஷத்தில் ஓலமிட்டோடியதோர் பாங்கை
பொங்கமாய்த் தேவர்களுமங்கே—ஜாத
புஸ்பமதை அந்தரத்தில் சூடினார்கங்கை

48. கண்டந்தவேடுவனுமரத்தை—விட்டு
கர்த்தருளென்றிரங்கி திரும்பியிருபுரத்தை
கொண்டுமே பார்த்துயிருகரத்தை—குவித்து
கும்பிட அஞ்சாதே யெனக்கொடுத்தாயொரு வரத்தை

49. பக்தர்களுக்கருள் புரியுமீசன்—கயிலை
பர்வதசதாவம்புரிகின்ற வாசன்
முத்தர்தொழுமூர்த்தி விஸ்வேசன்—முஸ்லீம்
முல்லாவுக்கருள்புரியவந்த உபதேசன்.

50. ஆதிநடுவந்தலகடந்தோன்—அரசர்க்
கருள்கொண்டகங்கையை யமர்த்தவேதுடர்ந்தோன்
பாதிபிறைமுடிவைணியானேன்—தாரை
பரமாவேனமுத்திகொடுக்கவே போனேண்.

51. முத்தொழில் நடத்து பரிசுத்தன்—கடம்
முளுதும்நிரையாய் நின்ற திருநடனசித்தன்
சித்தர்கள்கொண்டாடிடும் நித்தன்—எனக்கு
ஜெயவரம் கொடுத்தருளுமருதூருகர்த்தன்.

52. வேடர்க்குமுத்திதரும் ஆதி—அடியார் 178412
வினைதீர்க்கமருதூரிலமைந்த பரஞ்ஜோதி
தேடக்கிடைக்காத நீதி—எங்கள்
சித்தனயினாருடைய திருவடிவிபூதியே

53. திருநாகமணிந்தவா போற்றி—லோக
தேவர்களுக்கரிதான மூர்த்தியே போற்றி
அருள்வில்வவனநாத போற்றி—சத்தி
யம்பிகை சவுந்தரியின்மணவாள போற்றி.

54. ஆலவிஷமுண்டவா போற்றி—பிர்மன்
யாதவனுங்காணாதபொற்பாதா போற்றி
நீலகண்ட மேனியனே போற்றி—ருத்ர
நீர்தும்பையணிந்திட்டவேணியே போற்றி

55. சுகவரமளித்தவாபோற்றி—என்னைத்
துரிதமுடன்குடிகொண்ட குருநாதபோற்றி
ஜெகவரதபண்டிதா போற்றி—எந்தன்
சிந்தையைவிட்டகலாத கர்த்தனே போற்றி.

56. சங்கரமஹாதேவா சரணம்—எங்கள்
ஷண்முகன் உபதேசம்பெற்றவா சரணம்
பொங்கரவபணிந்தவா சரணம்—எந்தன்
பிணிதீர்த்த மருதூருப்புண்ணியா சரணம்.

57. மங்கைசவுந்தரிபாகா சரணம்—தேவ
மண்டபங்கிரியூகமமைந்தவா சரணம்
கங்கையணிநாதனே சரணம்—லோக
காருண்ய தீக்ஷண்யக்கடவுளே சரணம்.

58. மருதூரீநாயகா சரணம்—யெனக்கு
மருந்தூட்டிப்பிணிதீர்த்த முக்கண்ணா சரணம்
திருநடன நயினாரே சரணம்—ஞான
தீபதூபார்ச்சரண சேகரா சரணம்.

59. பூரணச்சுடர்வடிவே சரணம்—ஜெக
புவிபரவுங்கங்காதரவேணி சரணம்
காரணப்ரமானந்தா சரணம்—சிவ
காருண்யரக்ஷகக்கண்ணியா சரணம்.

60. தேவர்களுமுனிவர்களும் வாழி—ஆதி
திருமாலுமயனாருமுமயவளும் வாழி
பாடினவர் படித்தவர்கள் வாழி=யிதைப்
பக்தியாய் செவியுற்றுக்கேட்டோரும் வாழி.

சுபம்! சுபம்!!

புத்தக விளம்பரம்.

ிய நூல்! புதிய பதிப்பு !!

அகத்திய முனிவர்.

இது, மிகவும் அருமையான ஓர் அழகிய ஆராய்ச்சி நூல்.
ளிய வசன நடையில் தெளிய எழுதப்பெற்றது தமிழ்த்
யின் தலைமைப் புதல்வராகிய அகத்திய முனிவரது பிறப்பு,
ருப்பு, குணம், செயல் முதலியவற்றைத் தெளிவுர வுணர்த்து
து.

சரித்திரக் காட்சியோடு இலக்கிய மாட்சியும் இன்புற
ைசைந்தது. உணர்வுக்கினிய உறுதி நலங்கள் பல எழிலுற
ாய்ந்தது.

தமிழ் மக்களுச்கு இஃது ஓர் புதிய பாக்கியமாய் எளி
மைந்துள்ளது. ஒவ்வொருவர் கையிலும் இந் நூல் உறுதியாக
ருக்கவேண்டும்.

ம் காலிக்கோவில் அழகுறப்
ிண்டு செய்தது; இதன் விலை ரூ. } ... . 1—0—0

"THE LIGHT OF VIRTUE."

JUST PUBLISHED.

A very valuable and highly interesting poetical
rk.

Teaches morals and ideals of Life.

Suitable for young and old.

Must be in the hands of every one.

Antique Feather-weight paper; Well bound;
ice Rs. 1—2—0.

Apply to :—

Manager,

Thiruvalluvar Nilayam,

Tuticorin, (S. India.)